பக்கங்கள் 8

# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 22 | மார்கழி 3 | ஸபர் 9 | இதழ் 309

யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 18 - 12 - 80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
PERIODICALS DIVISION

## அத்தனகல எம்.பி. லக்ஷ்மன் ஜயக்கொடி

(கொழும்பு)

அத்தனகல தொகுதியின் எம். பி. யாக முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு லக்ஷ்மன் ஜயக்கொடி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் குடியுரிமைகள் ரத்துச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட இடத்திற்கு திரு. லக்ஷ்மன் ஜயக்கொடியை சிறீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவு செய்து தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து தேர்தல் ஆணையாளர் அவரது நியமனத்தை அறிவித்துள்ளார்.

திரு. ஜயக்கொடி, பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து சபையில் ஓர் அங்கத்தவராவார் என்று பாராளுமன்றச் செயலாளர் திரு. சாம்.விஜயசிங்க தெரிவித்துள்ளார். (கு)

# கலவானைக்கு இரு எம்.பிக்கள்

## இடைத்தேர்தலில் வெல்பவரையும் அனுமதிக்க அமைச்சரவை முடிவு

(கொழும்பு)

கலவான தொகுதியில் ஜனவரி 12-ம் திகதி நடைபெறும் இடைத்தேர்தலில் மக்களால் தெரிவுசெய்யப்படவிருக்கும் பாராளுமன்ற உறுப்பினரும் சபையில் அமர்ந்து ஒரு உறுப்பினராகச் செயல்படுவதற்கு அனுமதிப்பதென அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அமைச்சரவையின் இத்தீர்மானம் தொடர்பான பிரேரணை ஒன்றை அடுத்த மாதம் 6ம் திகதி பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா சபையில் சமர்ப்பிப்பார்.

கலவான தொகுதியின் உறுப்பினராக திரு. பிலப்பிட்டியாவே தொடர்ந்தும் இருப்பார் என சபாநாயகர் தீர்ப்பு வழங்கியதையடுத்து அவர் சபையில் ஓர் உறுப்பினராக செயல்பட்டுவருவது தெரிந்ததே.

இதேசமயம் கலவான தொகுதிக்கு இடைத்தேர்தல் ஜனவரி மாதம் நடைபெறவிருக்கின்றது. இத்தேர்தலில் தெரிவுசெய்யப்படும் உறுப்பினரையும் சபையில் அனுமதித்து உறுப்பினராகச் செயல்பட அனுமதிப்பதென நேற்று அமைச்சரவை நீண்ட நேர ஆலோசனையின் பின் முடிவுசெய்தது.

அமைச்சரவையின் இம்முடிவு குறித்து பத்திரிகை நிருபர்களிடம் கருத்து தெரிவித்த அமைச்சரவை பேச்சாளர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் கூறியதாவது:-

தங்களைப் பிரதிநிதித்துவப் விலக்குவது அரசின் நோக்கமல்ல. அவ்வாறு மக்கள் தெரிவுசெய்யும்போது அவ தெரிவு செய்பவரை விலக்குபடுத்தும் ஒருவரை மக்கள் மல்ல. அவ்வாறு மக்கள் தெரிவுசெய்யும்போது அவ தெரிவு செய்பவரை விலக்கு ரைப்பாராளுமன்றத்திலிருந்து (8ம் பக்கம் பார்க்க)

## அவநம்பிக்கை பிரேரணை விவாதம் உபதேர்தலைப் பாதிக்கும்!

## ஒத்திப்போடுமாறு அமிர், மைத்திரி கோரிக்கை

(கொழும்பு)

கலவான எம். பி. விவகாரம் தொடர்பாக சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தை கலவான இடைத்தேர்தலின் பின் ஜனவரி மாதத்தில் ஒருதினத்திற்கு ஒத்திவைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவரும், சுதந்திரக்கட்சி பாராளுமன்றக் குழுத்தலைவர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவும் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக திரு. அமிர்தலிங்கமும் திரு. மைத்திரிபால சேனநாயக்காவும் சபாநாயகருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவாதத்தை ஒத்திவைப்பதற்கான காரணங்கள் வருமாறு:

★ கலவான இடைத்தேர்தல் ஜனவரி மாதத்தில் நடைபெறுவதால் அதற்கு முன்னர் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் இடம்பெறும் பட்சத்தில் இடைத்தேர்தல் பாதிக்கப்படும். ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்கும்வகையில் இடைத்தேர்தலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது

★ கலவான எம். பி. விவகாரம் தொடர்பான சபாநாயகரின் தீர்ப்பு அரசியல்-சட்ட பிரச்னைகளை உள்ளடக்கியது. எனவே இதுகுறித்து ஆராய போதிய அவகாசம் வேண்டும். (8ம் பக்கம் பார்க்க)

## புதிய எம். பி. க்கு ஆசன வசதியில் பிரச்னை இல்லை!

(கொழும்பு)

கலவானத் தொகுதி எம். பி. யாக பாராளுமன்றத்தில் தற்போது இருந்து வரும் திரு. ஏ. பிலப்பிட்டியவுடன் எதிர்வரும் இடைத்தேர்தலில் தெரிவு செய்யப்படுபவரும் சபையில் அமர அனுமதிக்கப்படும் பட்சத்தில் அங்கு புதிதாக ஆசன வசதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது.

168 எம். பி. க்களுக்கான ஆசனங்கள் உள்ள சபையில் பேருவளை முதலாவது எம்.பி.யும் சபாநாயகருமான அல்ஹாஜ் பாக்கீர் மாக்காரின் ஆசனம் காலியாகவே உள்ளது சபாநாயகருக்கான ஆசனத்திலேயே அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் சபையில் அமருவார்.

கலவான இடைத்தேர்தல் முடிவடைந்த பின்னர் சபையில் 169 உறுப்பினர்கள் இருப்பர். (ம-)

## பாராளுமன்றம் ஜனவரி முதல் வாரத்தில் கூடுமா?

(கொழும்பு)

ஜனவரி மாதத்தில் மதுரையில் நடைபெறும் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் எம். பி. களும் கலந்து கொள்ளும் பொருட்டு ஜனவரி முதல் வாரத்தில் பாராளுமன்றக் கூட்டத்தை நடத்தாது அதற்குப் பதிலாக மூன்றாவது வாரத்தில் நடத்துவதென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட போதிலும் இம்முடிவில் மாற்றம் செய்யப்படுமா என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது

கலவான இடைத்தேர்தலில் வெற்றி பெறுபவரையும் பாராளுமன்றத்தில் அனுமதிப்பது என்று அமைச்சரவை (8-ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரிக்கு நானே எம். பி. சபையில் வி.என்.

(கொழும்பு)

சாவகச்சேரித் தொகுதிக்கு விசேட சேவை அதிகாரிகளாக 12 பேரை நியமிப்பதற்கு ஆறு பேரைச் சிபார்சு செய்யுமாறு திட்டமிடல் அமைச்சின் செயலாளர் என்னிடம் கேட்டுள்ளார். நான் ஆறு பேரைச் சிபார்சு செய்தால் மிகுதி ஆறு பேருக்கும் எவ்வாறு நியமனம் வழங்கப்போகிறீர்கள். (8-ம் பக்கம் பார்க்க)

உ

அருந்துங்கள் அண்ணா கோப்பி

சுன்னாகம் ஆதரவாளர்கட்கு ஓர் விசேட நற்செய்தி!

ஏராளமான ''அண்ணா கோப்பி'' பாவனையாளர்களின் அன்பு வேண்டுகோளை ஏற்று சுன்னாகம் மத்திய சந்தைக் கட்டிடத்தில் அமைந்துள்ள எமது கிளை ஸ்தாபனத்தில் இன்று 18-12-80 வியாழக்கிழமை தொடக்கம் சூடாகவோ, குளிராகவோ ''அண்ணா கோப்பி'' அருந்துவதற்கு ஒழுங்குகள் செய்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தொடர்ந்தும் எமது ஏனைய தயாரிப்புப் பொருட்களையும் சாய்ப்புச் சாமான்களையும் வழமைபோலப் பெற்றுக்கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு : வெற்றுப் பைக்கட்டுகளைச் சேகரித்து புதுவருட கலண்டர்களைப் பெற்றுக்கொள்ளத் தவறாதீர்.

அண்ணா தொழிலகம் (கிளை)

இல. 1, மத்திய சந்தை, சுன்னாகம்.

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு,
சகல பண்டிகைக்காலப் பொருட்களுக்கும்

சேல்!

எஸ். சின்னத்துரை அன் பிறதர்ஸ், யாழ்ப்பாணம்.
போன்: 284

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கண்டி வீதி, புறூடி ஒழுங்கையில் உள்ள நிலக்காணி 2-3 லாச்சம் பரப் பளவு உடன் விற்பனைக்கு உண்டு. இக்காணி யாழ்ப்பாணக் கச்சேரி, நாவலர் வீதி, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், புங்கன்குளம் புகையிரத நிலையம் ஆகியவற்றுக்கு அருகாமையில் உள்ளது. விபரங்களுக்கு தொடர்பு கொள்க: திரு. A. M. புறூடி, யாழ்ப்பாணக் கல்லூரி, (F) பிளற்ஸ், வட்டுக்கோட்டை. 7654

சாவகச்சேரி ஸ்ரேசன் றோட்டின் அருகாமையில் சகலவசதிகளுடன் அமைந்த 2 1/2 பரப்பு வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு வே. நடேசன், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. 7644

15'' இம்பிறியல் ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு றொக்வூட் அனட் கோ,. ஹாஜியார் மேல்மாடி. 224 1/8. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். 7657

மானிப்பாய் லோட்டன் றோட்டுக்கு அருகாமையில் 4 பரப்பு, 3 3/4 பரப்பு அடங்கிய இரண்டு துண்டுக் காணிகள் விற்பனைக்குண்டு. கீழ்க்கண்ட விலாசத்திற்கு உடன் தொடர்பு கொள்ளவும்: 12. பிரப்பங்குளம் வீதி, வண்ணார் பண்ணை. 7661

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதியுடன் வீடு' வளவு விற்பனைக்கும், பெண்களுக்கு மட்டும் சாப்பாட்டுடனும் தனித்தும் அறைகள் வாடகைக்கும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். சி. கனகரத்தினம், 465/1. கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 7666

## தேவை

வயலின், வாய்ப்பாட்டு தகமை பெற்ற ஆசிரியை யாழ்ப்பாணத்திலுள்ள இசை மன்றத்திற்கு தேவை. உடனடியாக விண்ணப்பிக்கவும் விளம்பர இல.7652, C/o ஈழநாடு லிமிட., யாழ்ப்பாணம் 765

யாழ்ப்பாணத்தில் பிரபலமான தொழிற்சாலைக்கு கணக்காளர் வேலைக்கு பெண் பிள்ளைகள் தேவை. G.C.E. (O/L) கணிதம், ஆங்கிலம், ரைப்பிங் சித்தியடைந்திருத்தல் விரும்பத்தக்கது 26-12-1980க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 7665, C/o ஈழநாடு,யாழ்ப்பாணம். 7665

## தவறிவிட்டது

மூக்குக் கண்ணடியொன்று நாவலர் சந்திக்கும், தட்டா தெரு சந்திக்குமிடையில் 12-12-80 வெள்ளி கிழமை இரவு காணமல் போய்விட்டது. இதைக் கண்டெடுப்போர் கீழ்க்கண்ட முகவரிக்கு ஒப்படைக்கவும். இந்த உதவி கண் இழந்தவர் கண்ணைப் பெற்றதற்கு சமமாகும். விளம்பர இலக்கம் 7658, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 7658

H 526961 என்ற இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் லைசென்ஸ் தவறிவிட்டது. அதனை கண்டெடுத்தவர்கள் 70, பலாலி வீதி, கந்தர்மடம் என்ற முகவரிக்கு சேர்த்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 7662

## கல்வி

மின்சாரத் தொழில் கற்க - தமிழ் 7ம் வகுப்பு - ஆறு வாரங்களில் எலெக்றிஷன் டிப்புளோமா - Jaffna Technical School, (பதிவு 1956ம் ஆண்டு', 53 (30), டேவிட் வீதி, குருநகர், யாழ்ப்பாணம், 7603

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வண்ணார் பண்ணை வட கிழக்கு என்னும் இடத்தைச் சேர்ந்த நாகையா சிவப்பிரகாசம் என்பவரின் மரணசாதனமில்லாத மரணச் சொத்தினதும் உடமைப் பொருட்களினதும் விடயத்தில்

மரணமெய்தியவர்

சிதம்பரப்பிள்ளை நாகையா கைம்பெண் ஞானப்பூங்கோதை இல. 56, காமனியா, அவன்யூ 1ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

வழ: இல. T/3542

எதிராக

1. நாகையா முத்துக் குமாரசுவாமி
2. செல்லத்தம்பி பூபாலசிங்கமும்
3. பெண்செல்வநாயகியும்
4. மூத்ததம்பி மார்க்கண்டுவும்
5. பெண் சிவகாமசுந்தரியும்
6. நாகையா மகள் அமிர்தலட்சுமி
7. நாகையா தில்லைத்திருச்சிற்றபலம்

எல்லோரும் இல. 56, காமனியா அவன்யூ, 1-ம் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாண.

பிரதிவாதிகள்

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ம் ஆண்டு தை மாதம் 23ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுகின்றனர்

1980ம் ஆண்டு மார்கழி 2ந் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி
(ஒப்பம்)
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது.
நா. சங்கரப்பிள்ளை,
(ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி.

7611

## இதயதாக நிகழ்ச்சி

(அரியாலை)

யாழ்ப்பாணம் புனிதர் யோவான் ஆலய வாலிபர் சங்கம் அளிக்கும் இதயதாக நிகழ்ச்சி இம்மாதம் 26ந் திகதி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இந்த நிகழ்ச்சியில் ''திசையறியாப் பயணம்'' என்ற நாடகம் இடம்பெறும்.

## பிரதமரை வரவேற்க ஏற்பாடு

(உடுப்பிட்டி)

கரவெட்டி கன்பொல்லை மாதிரிக்கிராமத்தைத் திறந்து வைப்பதற்காக அடுத்த மாதம் 30ம் திகதி கன்பொல்லை மாதிரிக்கிராமத்திற்கு விஜயம் செய்யும் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவிற்கு சிறப்பானவரவேற்பொன்றை அளிப்பதற்கு கரவெட்டி இராஜலிங்க கிராம அபிவிருத்திச் சங்கமும், இராஜலிங்க கிராம சனசமூக நிலையமும் முடிவுசெய்துள்ளன,

## நீர் பாய்ச்ச பொலிசார் அனுமதி மறுப்பு

(சித்தன்கேணி)

மாவிட்டபுரம் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பிரிவிலுள்ள த. இராமநாதனுடைய காணியில் வாய்க்கால் மூலம் நீர்பாய்ச்ச பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் அனுமதி வழங்கியிருந்தும் பொலிசார் தடைவிதித்திருக்கின்றனர்.

இதுபற்றித் தெரியவருவது த. இராமநாதன் தனது காணியிலுள்ள உப உணவுப் பயிர்களுக்கு வாய்க்கால் மூலம் நீர்ப்பாய்ச்ச வாய்க்காலுக்கு அருகாமையில் இருக்கும் திருமதி அ. மகேஸ்வரி தடைசெய்வதாகவும், வாய்க்காலை அழிப்பதாகவும் மாவிட்டபுரம் பயிர்ச்செய்கை உத்தியோகத்தருக்கு முறைப்பாடு செய்தார். இவரது முறைப்பாட்டைத் தொடர்ந்து விசாரணை செய்த பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் இருவருடையகாணி உறுதிகளையும் பார்வையிட்டுத் தீவிர விசாரணை செய்தபின்னர் எதிராளியான திருமதி அ. மகேஸ்வரியின் சம்மதத்துடன் வாய்க்கால்மூலம் நீர்ப்பாய்ச்ச அனுமதி வழங்கினர். ஆனால் காங்கேசன்துறைப் பொலிசார் இதனைத்தடை செய்துள்ளனர். இதனால் இராமநாதன் அரசாங்க அதிபருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதி 415ஐச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் வைத்திலிங்கம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

விசுவலிங்கம் வன்னியசிங்கம், 415, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன ) நியாயாதிக்கம் ) இல. 3548

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980ம் ஆண்டு மார்கழி மாதம் 19 ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
(ஒப்பம்)
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

1980ம் ஆண்டு மார்கழி மாதம் 9 ஆந் நாளன்று இன்று ... திகதியிடப்பட்டது.

7647

பருத்தித்துறை கொள்ளை:

## சந்தேகநபர் முல்லைத்தீவில் கைது; பொருட்களும் மீட்கப்பட்டன

(புலோலி)

பருத்தித்துறையில் கடை ஒன்றை உடைத்துப் பொருட்களைச் சுருட்டிச் சென்ற இளைஞர் ஒருவர் முல்லைத்தீவில் வைத்துப் பருத்தித்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

பருத்தித்துறை வியாபாரி மூலையிலுள்ள சிவசிதம்பரம் என்பவரின் கடை இரு தடவைகள் உடைக்கப்பட்டு பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டிருந்தது.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸ் சார்ஜன்ட் ஜனாப் எம். ரீ. எம். உவைசுக்குக் கிடைத்த தகவலையடுத்து சப் இன்ஸ்பெக்டர் ஜனாப் பி. எம். டூல், சார்ஜன்ட் ஜனாப் எம். ரி. எம். உவைஸ் ஆகியோரடங்கிய பொலிஸ் கோஷ்டி முல்லைத்தீவுக்கு விரைந்து முல்லைத்தீவிலுள்ள கடையொன்றில் வைத்து சந்தேக நபரான வியாபாரிமூலையைச் சேர்ந்த கே. பாலசுப்பிரமணியம் என்ற இளைஞரைக் கைது செய்தனர். அத்துடன் கொள்ளையடிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட பொருட்களை முரசுமோட்டை, செம்பியன்பற்று, தம்பசிட்டி,

(7ம் பக்கம் பார்க்க)

நத்தார் பெருநாளை முன்னிட்டு
மலிவு விலையில் கேக் தயாரிக்கும் பொருள்கள்

பிளம்ஸ் 100 கிறும்ஸ் ரூபா 5-50
ஜிஞ்சர் 454 கிறும்ஸ் ரூபா 12-00
சவ்சவ் 454 கிறும்ஸ் ரூபா 9-50
வனிலா ஆமன்றேஸ் ரூபா 3-00
கன்டிபீல் 100 கிறும்ஸ் ரூபா 3-00

மற்றும் அழகு சாதன, விளையாட்டு, சாய்ப்புச் சாமான்களும் எம்மிடமுண்டு.

எஸ். பி. எஸ். லக்கிறேட் சென்ரர்

16, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
போன்: 430
(7618)

## நன்றி நவிலல்

சந்திரசேகரன். மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் கடமையாற்றியவரும், இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், குமரன், ரமணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுன்னாகம் மயிலணி கு. முத்துகுமாரசுவாமிப்பிள்ளையின் இளைய புத்திரனும், இளையாணன் முதலியா வளவு ம. குமாரசூரியரின் மருமகனுமாகிய சந்திரசேகரன் அவர்களின் இறுதச் சடங்கில் கலந்துகொண்ட உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

அத்துடன் யாழ். அரசாங்க வைத்திய சாலை வைத்தியர்களுக்கும் உதவியாளர்களுக்கும் எமது நன்றிகள்.

-குடும்பத்தினர். 7669

# அறிவித்தல்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்டண்ணைக் கோவில்பற்று வண்ணார்பண்ணை தென் கிழக்கு இறை சாந்தனுதன்தறையும் வண்ணாரப்புலமும் பரப்பு நி. இ. 9 என்னும் காணி யாழ்ப்பாணம் நாவலர் வீதி 235-ம் இலக்கத்திலுள்ளது. இக்காணி சிதம்பரம் அம்பலவாண சுவாமி மானுமுதலியார் மடம் தர்மகர்த்தா சபைக்குரியது.

இக்காணியையும் இதன் கிழக்குப்பக்கத்தில் சபையின் அனுமதியுடன் திரு. சு. குமாரசுவாமி அவர்களால் கட்டுவிக்கப்பட்ட கட்டிடத்தையும் மேற்படி தர்மத்தின் அபிவிருத்திச்காக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற அனுமதி பெற்றபின்னர் விலைக்கு விற்பதற்குச் சபை தீர்மானித்துள்ளது.

அதல்லாமல் இக்காணியைப் பராதீனப்படுத்த அல்லது விலைக்கு விற்பதற்கு வேறு ஒருவருக்கும் உரிமையில்லையென்பதையும், இக்காணி பரப்பு நி. இ. 9ஐயும் கட்டிடத்தையும் விலைக்கு வாங்க விரும்புபவர்கள் குறித்த காணிக்கும் கட்டிடத்துக்கும் தனித்தனி பெறுமதிசோதி 1981-ம்ஆண்டு தைமாதம் 15-ம் திகதிக்குமுன் சபையின் தனுதிகாரிக்கு எழுத்தில் விண்ணப்பிக்கும்படி இத்தால் அறியத்தருகின்றோம்.

இ. சண்முகநாதன்
மேற்படி சபைத் தனுதிகாரி, மனேஜர்
சி. அ. மானுமுதலியார் மடம்,
தர்மகர்த்தா சபை,
தொல்புரம்.

சி. அப்புத்துரை
தலைவர்

7663

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அசாம் மாணவர்கள் ஆர்ப்பாட்டம், சத்தியாக்கிரகத்தைகைவிடவேண்டும்

## அசாம் முதலமைச்சர் வேண்டுகோள்

கௌகாத்தி, டிச 17. அசாமில் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களை கைவிட்டு வெளி நாட்டவர் பிரச்னைக்கு பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காண முன்வரவேண்டும்.

மேற்கண்டவாறு அசாம்மாநில முதலமைச்சர் அனைத்து அசாம் மாணவர் சங்கத்திடம் கேட்டுள்ளார்.

அவர் மாணவர்களிடம் மேலும் கேட்டுள்ளதாவது அசாம் பிரச்னை தொடர்பாக மாணவர்கள் நடத்தவிருக்கும் ஆர்ப்பாட்டங்களையும், சத்தியாக்கிரகத்தையும் கைவிட்டு அசாம்மாநில அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த முன்வர வேண்டும் ஆர்ப்பாட்டங்கள், சத்தியாக்கிரகங்களை நடத்துவதினால் கிளர்ச்சி மேலும் அதிகரிக்குமே தவிர அதன் மூலம் பிரச்னைக்கு எந்தவித தீர்வும் காணமுடியாது என்றார். (வெ)

புதுடில்லி டிச 17. உருதுமொழிக்கு இரண்டாவது உத்தியோகமொழி அந்தஸ்து வழங்குவதென்ற பீகார் அரசாங்கத்தின் மசோதாவை பீகார் சட்டசபை அங்கீகரித்துள்ளது. (வெ)

## ‘மக்களுக்கு பயனளிக்கும்’

(யாழ்ப்பாணம்)

‘உலகப்புகழ் சோதிடர் கலாநிதி பண்டிதர் கே. என். நவரத்தினத்தால். ந்து சமய எண்சோதிட மூலக் கொள்கையானது ஆராயப்பட்டு நவீன விஞ்ஞானக் கருத்துகளுடன் மலர்சசிபெற்று, ‘எண்சோதிட மறுமலர்ச்சி’ என்னும் அரிய நூலாக வெளிவந்துள்ளது. இநநூல் மக்களுக்குப் பெரும் பயனை விளைவிக்கும் என்பது திண்ணம்’

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற ‘‘எண்சோதிட மறுமலர்ச்சி’’ என்னும் நூலவெளியீட்டுவிழாவில்தலைமைவகித்து உரையாற்றியஇலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணிய ஐயர் மேற்கண்டவாறு கூறினார்.

இந் நூலின் முதற்பிரதியை சோதிடர் மு மார்க்கண்டு பெற்று விழாவை ஆரம்பித்து வைத்தார். மற்றும் பலர் இந் நூலின் சிறப்புப்பற்றி உரையாற்றினர். (கு)

## ‘‘இந்துசமுத்திரப் பிரதேசத்தின் அமைதி இராணுவத்தளங்கள் அமைக்கும்நாடுகளில்தங்கியுள்ளது’’

### இந்திய வெளிநாட்டமைச்சர்

புதுடில்லி, டிச 17. ‘‘இந்து சமுத்திரப் பிரதேசத்தின் அமைதி அங்கு இராணுவ தளங்கள் அமைக்கும் நாடுகளில் தான் தங்கியிருக்கிறது. வல்லரசுகள் இப்பிரதேசத்தில் போட்டா போட்டியாக இராணுவத் தளங்கள் அமைக்க முயல்கின்றன’’.

மேற்கண்டவாறு இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. நரசிம்மராவ் தனது அமைச்சின் ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது ‘‘பாரசீகவளை குடாப் பிரதேசத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காக சோவியத் ஜனதிபதி திரு. லியோனிஸ்ட் பிரஷ்னேவ் தனது இந்திய விஜயத்தின்போது வெளியிட்ட ஐந்து அம்சத் திட்டத்தை இந்தியா பரிசீலனை செய்து வருகின்றது. இதனை நுணுக்கமாகப் பரிசீலனை செய்த பின்னரே இந்தியா இது தொடர்பாக ஒரு இறுதி முடிவை மேற்கொள்ளும்’’ என்றார். (வெ)

## விமானக் கடத்தல்

ஹவானு டிச.17. கியூபாவிற்குக் கடத்திச் செல்லப்பட்ட கொலம்பியா விமானத்தில் பிரயாணம் செய்த இந்தியப் பயணிகள் அனைவரும் ஹவானுவில் விடுதலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இவ்விமானம் கொலம்பியாவின் தலைநகரிலிருந்து இனம் தெரியாத நபர்களினுல் கியூபாவிற்குக் கடத்திச் செல்லப்பட்டது.

இவ்விமானத்தைக் கடத்தியவாகள் இடதுசாரிக் கெரில்லா பிரிவைச் சேர்ந்தவர்களென்று கியூபா அதிகாரிகள் கூறியுள்ளனர். (வெ)

## முன்னுள் அமைச்சர் காலமானுர்

புதுடில்லி டிச 17 முன்னுள் மத்திய அமைச்சர் டாக்டர் ராம்சிவத் சிங் காலமானுர். இவருக்கு இறக்கும் போது 63 வயதாகும்.

இந்தியப் பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தியும், மத்திய அமைச்சர்கள் சிலரும் இவரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர். (வெ)

## நத்தார் நிகழ்ச்சி

(அரியாலை)

கிறிஸ்துவுக்காக இளைஞர் சங்கம் அளித்த விசேஷ நத்தார் நிகழ்ச்சி நேற்று முன் தினம் றிம்மர் மண்டபத்தில நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் விநோத விளையாட்டுகள், விசேட பாடல்கள், நகைச்சுவை நடகங்கள் ஆதியன இடம்பெற்றன. இறுதியில் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட யாவருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.



நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானத்தில், ஸ்ரீ ஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகா ‘திருவருள்’ என்னும் சைவசமய சஞ்சிகையின் முதற்பிரதியை சிவநெறிக்காவலர் திரு .. னகராசா விடம் வழங்குவதையும் திரு. கனகராசா பிரதியைப் பெற்றுக்கொள்வதையும் இங்கு காணலாம்.

# வியட்னுமில் சீன ஊடுருவல்: விசாரணைக் கமிட்டி அறிக்கை

ஹனேய், டிச 17. அக்டோபர் மாதத்தில் மாத்திரம் வியட்னும் குடியரசின் இறமைமையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் சீனு 60 தடவைகள் மீறியுள்ளது.

இவ்வாறு சீன ஆக்கிரமிப்புகளை விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட கமிட்டி தெரிவித்துள்ளது. அக் கமிட்டி தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

சீனு அதன் வியட்னுமிற்கு எதிரான நடவடிக்கைகளை கடைபிடிக்கும் அதேவேளை எல்லையில் பதட்டத்தை ஏற்படுத்தியும், பயமுறுத்தியும் வருகிறது.

சீனு ராணுவத் துருப்புக்களை வியட்னுமுக்கு பக்கத்திலுள்ள எல்லையில் குவித்தும் பாசறைகளை நிறுவியும் வருகிறது.

வியட்னுமின் வட மகாணங்களாக காவோ பாங், உறாதுயங் இரண்டிலும் விசேஷ ஆத்திரமூட்டல்களை சீனு நடத்தியது. பீரங்கி தாக்குதல்களும் நடத்தப்பட்டது. படைப் பிரிவுகள் அத்துமீறி ஊடுருவின. இதன் விளைவாக வியட்னும் குடியிருப்புகள் சேதமாகின.. சிவிலியன்கள் உயிரிழந்தனர்.

வியட்னுமுக்கு எதிராக பொருளாதார சேதங்களை சீனு விளைவித்து வருகிறது. வியட்னுமுக்குள் சதி வேலைகளை செய்கிறது.

## நமீபியா பிரச்னை சமாதானமாகத் தீர்க்கப்பட வேண்டும்

### ஐ. நா. பொதுக் காரியதரிசி ஆலோசனை

நியூயோர்க், டிச 17. நமிபியா பிரச்னையை சமாதானபூர்வமாக தீர்த்து கூடிய சீக்கிரத்தில் சுதந்திரம் வழங்குவற்கு மகாநாடு கூட்டப்பட வேண்டும்

இவ்வாலோசனையை ஐ நா. பொதுக் காரியதரிசி கலாநிதி குர்த் வால்ட்ஹைம் ஐ. நா. சபைக்கு சமர்ப்பித்துள்ளார்.

இதற்கு ஸ்வாபோ (நமிபியாவின் பிரதிநிதியாக அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்) இணக்கம் தெரிவித்துள்ளது. ஐ நா. கண்காணிப்பில் நடத்தப்படும் பொதுத் தேர்தலில் பங்கு கொள்ளவும் ஸ்வாபோ சம்மதம் தெரிவித்துள்ளது.

இதற்கு தென்னுபிரிக்கா குடியரசு நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை.

நவம்பர் மத்தியில் பிரிட்டோரியாவில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாடொன்றில் பேசிய பிரதமர் பீட்டர் போத்தா ‘‘தென் மேற்கு ஆபிரிக்காவை கைவிட்டுவிடும் உத்தேசம் கிடையாது’’ என்று கூறியுள்ளார், ஐ. நா. விதிக்கும் பொருளாதார தடைகளைக் கண்டு அஞ்சிவிடப்போவதில்லை; முன்னைய தடைகளையும் தென்னுபிரிக்கா சமாளித்தது. ராணுவ தளபாடங்கள் தடைசெய்யப்பட்டன, இன்று தளபாடங்களை ஏற்றுமதி செய்யும் விலையில் தென்னுபிரிக்கா உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நேட்டோ நாடுகளிடமிருந்து போதிய ராணுவத் தளபாடங்கள் தென்னுபிரிக்காவுக்கு கிடைக்கின்றன என்றார்.





பெறுமதி வாய்ந்த உணவுப்பயிர்களைப் பாதுகாக்க

எல்சான்

நெற்பயிர், காய்கறி வகைகள், பழமரங்கள், திராட்சை, தேயிலை, புகையிலைச்செடிகளைத்தாக்கும் எல்லாவிதப் பூச்சிகளையும் அழிக்கவல்ல பல்வகைப் பூச்சிக் கொல்லி எல்சான்

★ குறைவான நச்சுத்தன்மை
★ பெருமளவு வகையான பூச்சிகளை எதிர்க்கக்கூடிய உயர்சக்தியுடையது.
★ விரைவான நடவடிக்கை



கூட்டுறவுக்கடைகளிலும், லங்கெம் விவசாய சேவை நிலயங்களிலுங்கிடைக்கும்

எல்சான் - தரமான லங்கெம் தயாரிப்பு.

450 மி. லீற்றர் -- ரூபா 51/75


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பாலும் நீரும் கலந்ததுபோன்றது உலகம். பகவத் சான்னித்திய உணர்வினல் வரும் ஆனந்தமும் இந்திரிய போக சுகமும் கலந்தது அது. நீ ஒரு அன்னம் போன்று இருந்து நீரைத் தவிர்த்து விட்டுப் பாலைப் பருகு.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

# சபையில் மீண்டும் ஒலித்த ராமாயணம்!

(கொழும்பு)

சபையில் நேற்று முன்தினமும் இராமாயணக் கவிதை ஒலித்தது!

பண்டிதர் கா. பொ. இரத்தினம், போக்குவரத்து அமைச்சின் மான்ய ஒதுக்கீடுமீதான விவாதத்தில் கும்பகர்ணனை இராவணன் போருக்கு அனுப்ப அழைத்தபோது அவன் இராவணனின் ஆட்சி பற்றி கூறிய கவிதையை சபையில் உவமித்தார்.

''ஆசில் பலதாரம் அஞ் சிறை அடைப்போம்; மாசில் புகழ் காமுறுவோம் வளங் கூர: பேசுவது மானம் இடை பேணுவது காமம்; கூசுவது மானிடரை நன்று நம் கொற்றம்!''

இதுதான் பண்டிதர் கூறிய கவிதை.

''ஆசில் பலதாரம் அஞ் சிறை அடைப்போம்'' பிறர் மனைவியைச் சிறையில் அடைத்துவிட்டு,

''மாசில் புகழ் காமுறுவோம்'' புகழை விரும்புகிறோம்; அதுபோல் தமிழ் மக்களின் இறைமை, உரிமையை அடைத்துவைத்துவிட்டு; சமத்துவம், தார்மீகம் என்று பேசுகிறோம்.

''வளங்கூரப் பேசுவது மானம்; இடை பேணுவது காமம்''

''நாம் அரசியல் நடத்துகிறோம்'' என்று கூறுகிறார்கள். ஆனல் இங்கு ஊழலாகத்தான் இருக்கிறது அதை யாரும் மறுக்க முடியாது.

(5ம் பக்கம் பார்க்க)

# நமது நோக்கு

## 'கோவிலும் சுனையும்'

'சோழியன் குடுமி சும்மா ஆடுமா?' என்பார்கள்.

சோவியத் ஜனதிபதி பிரெஸ்னேவ் கடந்த பத்து வருடங்களில் இந்தியாவிற்கு மூன்று முறை விஜயஞ் செய்திருக்கிறார்.

இவ்விருநாடுகளின் விவகாரங்கள், நல்லுறவு போன்ற விடயங்களானல் உலகின் மிகப்பெரும் அதிகாரம் கொண்ட பேர்வழி இவ்விதம் உலாத்த முடியுமா?

ஆசிய பிராந்தியத்தில், ஏன் அகிலஉலகிலுமே உலக சமாதானத்தை யொட்டி இவ்விரு நாடுகளும் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டுமென்ற விடயங்கள் இன்றைய விஜயத்தில் இடம் பெற்றிருக்கவேண்டும்.

பாரசீக வளைகுடா பாதுகாப்புக்கு ஐந்து அம்சத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்து தமது நாட்டின் ஆசியக் கொள்கையைத் திட்டவட்டமாக விளக்கியுள்ளார். ''வளைகுடாவில் கைவைக்காதிருக்கும்'' தமது திட்டத்தில் ஆர்வமுடைய சகல நாடுகளும் ஐந்து உறுதிமொழிகளை வழங்கவேண்டுமென்பதே அவருடையநிபந்தனை.

அந்த நிபந்தனையை விபரித்தால், ஆசிய பிராந்தியத்தில், இந்து சமுத்திரப் பிரதேசத்தில், வெளிநாட்டு இராணுவத் தளங்கள் அமைப்பதில்லை. வளைகுடா நாடுகளுக்கும், பொதுவாக அணிசேரா நாடுகளுக்கும் எதிராகப் படைப்பல பிரயோக பயமுறுத்தல் செய்வதில்லை என்பதேயாம்.

முதலாளித்துவ மேனடுகள் சோவியத் ஜனதிபதியின் இந்திய விஜயத்தையிட்டு ஆத்திரங்கொண்டிருப்பது ஆச்சரியமில்லை. அதேசமயம் ரஷ்யாவின் ஆப்கான் ஆக்கிரமிப்பிற்கு எவ்வித ஆதரவும் அளிக்காத இந்தியா சோவியத் ஜனதிபதிக்குத் தகுந்த வரவேற்பு அளிக்குமென்பதிலும் அதிசயமில்லை.

நாளுக்குநாள் பாகிஸ்தானுக்கு பல்வேறு நவீன-ஆயுதப் படையை வழங்கும் அமெரிக்காவிற்கு ஒரு சவாலாக இந்திய — சோவியத் நட்புறவு அவசியமல்லவா?

ரஷ்யாவின் ஆப்கான் ஆக்கிரமிப்பை, அணிசேராக் கொள்கையின் தந்தையாகிய நேருவின் புதல்வி இந்திரா என்றுமே ஆதரித்ததில்லை. இதனை சாட்டாகக்கொண்டு மேனட்டு ஏகாதிபத்தியவாதிகள் இவ்விரு நாடுகளுக்கிடையே, இவ்விஜயத்தின்போது ஒரு பிணக்கை ஏற்படுத்த முயன்றிருப்பதாகத்தெரிகிறது. வேற்றுநாட்டுத்தலையீட்டை எவ்விதத்திலும் இந்தியா அனுமதிக்கமாட்டாது என்று சோவியத் ஜனதிபதிக்குப் பதிலளித்த இந்திரா ரஷ்ய இராணுவ உதவியைப் பெறுந்தருணத்தையும் கைவிடவில்லை.

அமெரிக்காவுடனே, சீனவுடனே நட்புடன் வாழ விரும்பும் இந்தியாவிற்கு இவ்விரு நாடுகளும் அன்று தொட்டு இன்று வரைக்கும் என்ன மனோநிலையில் செயற்படுகின்றன என்பது இந்திராவிற்குப் பளிச்செனவிளங்கும். பங்காளாதேஷ் யுத்தம் இந்திராவிற்கு மறக்கமுடியாத பாடம். இந்தியா இதுவரையும் எந்தநாட்டுடனும் போர் தொடுத்ததில்லை. ஆனல் அதனைப் பேருக்கிழுத்த நாடுகள் இன்னும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள முடியவில்லை.

இந்தோ - சோவியத் நட்புறவு பற்றி 'ரஷ்யன்தனுஷ்கோடிக்கு வந்து விட்டான் இலங்கை யாத்திரை ஆரம்பமாகும் கட்டமென' இங்குள்ள குட்டி முதலாளித்துவ மன்னர் முணுமுணுக்கத் தொடங்கி விட்டனர். கம்பூச்சியாபோல் ஆப்கானிஸ்தான்போல், எங்கள் நாடும் என்னவோ என்று ஆதாரமற்ற அச்சத்தில் வாழும்'' பொதுவுடைமை எதிரிகள் பலர் உளர்.

மற்றொரு புறத்தில் அமெரிக்காவின் தலையீட்டை என்றுமே கண்டிக்கும் சோஷலிச வாதிகள் திருகோணமலை பற்றித் திகிலடைகின்றனர். ஆளும் கட்சியினர் அமெரிக்கா பக்கம் சாயுங் கூட்டமென்றும், திருகோணமலையில் அமெரிக்காவிற்கு இராணுவத்தளம் அமைக்க வசதிகள் கிடைக்குமெனவும் கூச்சலிடுகின்றனர்.

இவ்விடயம் பாராளுமன்றத்தில் மானிப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கத்திற்கும், வெளிநாட்டு விவகார அமைச்சர் ஹமீட்டுக்கும் ஒரு காரசாரமான விவாதத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்தியப் பாராளுமன்றத்தில் இலங்கையைப் பற்றிய சந்தேகமும் இலங்கையில் இந்தியாவின் ரஷ்ய சார்புக் கொள்கையைப் பற்றிய சந்தேகமும் நிலவுகின்றன.

இன்று உலகம் போர்க் கொந்தளிப்பில் மிதக்கும் வேளையில் நாம் யாரை நம்புவது? இலங்கை இராணுவ உலகில் ஆசியாவில் மூளும் போரில் ஒரு கேந்திர ஸ்தானத்தை வகிக்கின்றது. அதனை தங்கள் நலனுக்குப் பயன்படுத்துவதே வல்லரசுகளின் வேணவா.

எமது நாட்டைப் பாதுகாப்பது நாட்டின் காவல்தெய்வங்களே. வடக்கில் திருக்கேதீஸ்வரமும், கிழக்கில் கோணேஸ்வரமும், மேற்கில் முன்னேஸ்வரமும், தெற்கில் கதிர்காமமுமேயாம்.

17 ஆண்டுகளின்பின் திருக்கோணேஸ்வர ஆலயத்தில் நடைபெறும் கும்பாபிஷேகம் கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த 'தாயினும் நல்ல தலைவருக்கு' காக்கும் சக்தியை அதிகரிக்கும்.

(இன்று வைகுந்த ஏகாதசி)

## நாராயண சிந்தனை

நாரா யணனே நாரா யணனே-ஹரி ஓம்
நம நம நாரா யணனே
நாரா யணவெனுந் தாரக மந்திரம்
நமனவை குண்டஞ் சேர்த்திடுமே
பகவத் கீதையின் பொரு ளோனே
பார்த்த சாரதி யானவனே
அகமுக மாகி மன மெல்லாம்
அடங்க அருள்வாய் அச்சுதனே
திருமகள் மார்பா திருமாலே
திருவுற நின்னருள் தந்திடுவாய்
அருளுறு மடியவர் துயர் களைந்தே
அவனியை அமைதி செய்பவனே
பாண்டவர்க் காகத் தூது சென்று
பாரதப் போரிற் கலந்தவனே
பாண்டது மீண்டெழ மகிதலத்தை
மாண்புறச் செய்த மாயவனே
சீதா தேவியைச் சிறை மீட்டே
சீறிய இராவணன் செருக்கறுத்தாய்
பாதாம் புயத்தைப் பணிந் தெழுவார்
பாவம் போக்கும் பரந்தாமா
நரஅரி வடிவெடுத் திரணி யனை
நசித்தே அவன் மகன் துயர்தீர்த்தாய்
திரமொடு கோவர்த் தனமெடுத்தே
திருந்திட இந்திரற் கருள்புரிந்தாய்
ஆதி சேடன் அணை மீதே
ஆனந்தப் பாற்கடற் றுயில்வோனே
நீதி நேர்மை நல்லொழுக்கம்
நிறையச் செய்வாய் நெடுமாலே
சங்கு சக்கரந் தாங்கி யருள்
சற்குண சுந்தர கேசவனே
பங்கய நாபா பரந்தாமா
பந்தமிலா தெமைக் காப்பாயே
கருட வாஹன ஹரி நாராயண
கருது கோகுல ஸ்ரீ நாராயண
தருண மிதுவெமைத் தாங்கிடுவாய்
தருதவ நமோநம நாராயணனே.

ச. தங்கமாமயிலோன்

# நாடும் நடப்பும்....

அவர் ஒரு ஆயுள்வேத வைத்தியர். இப்பொழுது இங்கிலாந்தில் மூன்றுவருடப் படிப்பிலீடுபட்டிருக்கிறார். யாழ்ப்பாணத்தில் ஒருபெரிய பங்களா கட்டிமுடித்திருக்கிறார்.

''இந்தப் பங்களாவைக் கட்டத் தொடங்கியபோது என் கையில் பணமே கிடையாது. காணி கிடைத்துவிட்டது. எப்படி வீடுகட்டுவது என்று யோசனைதான். ஒருநாள் இரவு எனது கனவில் ஒரு கறுத்த மேனியர் வந்து எனது இரு கைகளுக்குள் எதையோ வைத்துவிட்டு, உனக்கென்றுஇடத்தை அமைத்துக்கொள்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். கையை விரித்துப் பார்த்தால் அது பளபள வென்று ஜொலித்துக்கொண்டிருக்கிறது.

கனவு கலைந்துவிட்டது. மறுநாட்காலை நான் வழமை போல் பெருமாள் கோயிலுக்குச் சென்றேன். அன்று என்னையறியாமலேயே மனதில் ஒரு புதிய மனநிலை. முதல் நாளிரவு கனவில் வந்தவர் மூலவர் என்றே எனது மனம் சொல்கிறது.

கோயிலிலிருந்து வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருக்கையில் வழியில் இருநண்பர்களைச் சந்தித்தேன். வீடுகட்டுவதுபற்றி வழமைபோல் மூவரும் பேசினேம். அவர்களில் ஒருவர் ''இன்றே கல்லும் மண்ணும் பறிக்கிறேன்'' என்றார். மற்றவர் ''நான் சிமெந்து கொண்டு வந்து சேர்க்கிறேன்'' என்றார்: இப்படி இரண்டு நண்பர்களும் உதவிபுரிய முன்வந்தார்கள். இன்றுபங்களாவாக அதுகாட்சியளிக்கிறது. இதுவெங்கடேசப் பெருமாளின் அனுக்கிரகமே தவிர எனது முயற்சியல்ல'' என்று கூறும் அந்த டாக்டர் தனது இல்லத்துக்கு ''வேணுகானம்'' என்று பெயர் வைத்திருக்கிறார்.

அவரது மனைவியார் ஒருகத்தோலிக்கர். எந்தப் பேதமுமில்லாமல் அந்தக் குடும்பம் குதூகலமாக வாழ்கிறது.

0 0 0

சிறந்த நாடகநடிகரும் திரைப்பட நடிகருமான திரு. ஆர். எஸ். மனேகர் அமைதியும் அடக்கமும் மிகுந்த பண்பாளர். சில வருடங்களுக்கு முன் இலங்கைக்கு வந்து ''இலங்கேஸ்வரன்'' நாடகத்தைப் பல இடங்களிலும் மேடையேற்றிப் பாராட்டுப் பெற்றதுடன் ''இலங்கேஸ்வரன் மனேகர்'' என்று பட்டம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டவர்.

வரலாற்று நாடகங்கள் பலவற்றைத் தயாரித்துப் பிரமாண்டமான மேடையமைப்புக்களுடன் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் மேடையேற்றிப் பெரும் பாராட்டைப் பெற்றுள்ள நடிகர் மனேகர் தமது நாடகக்குழுவுடன் யாழ்ப்பாணத்துக்கு வந்து ஒரு மாதமாவது நாடகங்கள் போடவேண்டுமென்று விரும்புகிறார். இதற்காக இரண்டு தினங்களுக்குமுன் யாழ்ப்பாணம் வந்திருந்த மனேகர், தமது நாடகங்களை மேடையேற்றக்கூடிய மண்டபங்களைப் பார்வையிட்டார். பிரமாண்டமான காட்சி ஜோடனைகள் அமைக்கக்கூடிய மண்டபவசதி யாழ்ப்பாணத்தில் இன்னமும் உருவாகவில்லையே! திறந்த வெளி அரங்கு மேடைதான் ஓரளவுக்குப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

0 0 0

உருக்குக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் சில்வாவுக்கு பாராளுமன்றம் ஐயாயிரம் ரூபாய் அபராதமும் பாராளுமன்றக் கூட்டம் ஒத்திவைக்கப்படும்வரை சிறைத் தண்டனையும் விதித்ததல்லவா?

(4-ம் கலம் பார்க்க)

# மக்கள் கருத்து

## யாழ். பூங்காவில் ஒலிபரப்புச் சேவை

யாழ். மாநகரசபையின் சுப்பிரமணியம் பூங்காவில் மூன்று வாரங்களாக வானெலி ஒலிபரப்புச்சேவை நடைபெறுதிருக்கிறது. இதனல் பொது மக்கள் பல அசௌகரியங்களை குறிப்பாக உள்நாட்டு வெளிநாட்டுச் செய்திகள் முதலியவற்றை கேட்க முடியாதுள்ளது. ஒலிபரப்புக் கருவி பழுதடைந்தநிலை மேலிடத்திற்கு அறியத்தரப்படவில்லையா? அல்லது அறிந்தும் செயல்படுத்த முடியாதநிலையா? இதனல் இங்குவருவோர் முக்கியமாக சொந்த வானெலி இல்லாதோரும் குறிப்பிட்ட நேரத்தில் வானெலியை வீடுகளில்கேட்க முடியாதோரும் பெரும் அதிருப்தி அடைந்துள்ளனர், இதனை யாழ். நகர மக்களுக்காக இயங்கும் மாநகரசபையின் தகுதிவாய்ந்த அதிகாரிகவனித்து மேல்நடவடிக்கை எடுப்பார்களா?

-நரேன் சந்திரகுமார்
பரா. எஸ். ராஜா
ப. ராகுலன்
யாழ்ப்பாணம்.

## அமெரிக்க வெளிநாட்டமைச்சர்

வாஷிங்டன், டிச 17

அமெரிக்காவின் புதிய ஜனதிபதியாக ஜனவரி 20-ம் திகதி பதவியேற்கவிருக்கும் திரு. ரொனல்ட் றீகன் அமெரிக்காவின் வெளிநாட்டமைச்சராக முன்னள் ஜெனரல் அலெக்சாண்டர் பேர்க்கை நியமித்துள்ளார்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

அபராதத் தொகையைக் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சின செயலாளர் திரு. ஜஸ்டின்டயஸ்அன்றேபாராளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் செலுத்திவிட்டார்.

சபை ஒத்திவைக்கப்படும்வரை பாராளுமன்றப்பொலிஸ் அலுவலகத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த பேராசிரியர் சில்வா விடுதலையாகும்வரை கவிதை புனைவதில் ஈடுபட்டிருந்தாராம்.

இலங்கைவானெலியில்முதல் முதலில் ஒலிபரப்பப்பட்ட கலையரசு சொர்ணலிங்கம் பாடிய ''சோறு பச்சடிசாப்பிடலாம்'' என்ற பாடல் நேற்றுமுன்தினம் தென்கிழக்காசிய ஒலிபரப்புத் தமிழ்ச்சேவையில் ஒலிபரப்பப்பட்டது. ஐம்பத்தைந்து ஆண்டு நிறைவையொட்டி இலங்கை வானெலியின் தமிழ் ஒலிபரப்பு பழைய நிகழ்ச்சிகளை நல்ல முறையில் நினைவுபடுத்திக்கொண்டது பாராட்டுக்குரியது.

—ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபையில்...

(4- பக்கத் தொடர்ச்சி)

''கூசுவது மானிடரை நன்று நம் கொறறம்!''

''நாம் உண்மையைச்சொன்னதும் கூசுகிருர்கள். அதனுல் உங்கள் ஆட்சி நல்லதுதான். இராவணனுக்கு கும்பகர்ணன் கூறியதுபோல் உங்கள் ஆட்சியும் சொல்லுவது ஒன்ருகவும் செய்வது வேறு ஒன்ருகவும், விரும்புவது ஒன்ருகவும் நடைமுறைப்படுத்துவது வேறென்ருகவும் மாருக இருக்கிறது.

இந்நிலையை மாற்றி அறத்தின் அடிப்படையில்தான் ஓர் ஆட்சி சிறக்கலாம் என்பதை நீங்கள் உணரவேண்டும். இதனை எடுத்துக்காட்டவே இக்கவிதையைக் கூறினேன். அதுதான் உண்மையான தார்மீகம்; அதுதான் சமத்துவம்; அதுதான் எல்லா ஊழலையும் நீக்குவது. அதற்கு முன்னேடியாக இந்த அமைச்சு செயல்படட்டும்.''

இவ்வாறு பண்டிதர் கூறினார். (ம)

# பட்டப்படிப்புகள் கல்லூரி

## யாழ்ப்பாணம் | மட்டக்களப்பு.

புதிய (வெளிவாரி) மாணவர்களை அனுமதித்தல்— 1981/82

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் கலைமாணி(B.A) வர்த்தக மாணி (B Com), சட்டமாணி (LL.B), புள்ளி விபரவியல் (B.Sc) ஆகிய வெளிநிலைப் (External) பாடநெறிகளுக்கான தமிழ் மொழிமூல விரிவுரைகளுக்கு புதிய மாணவர்களை அனுமதிக்கும்பொருட்டு பின்வரும் தகைமைகளில் ஒன்றை உடைய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

(1) க. பொ. த. உயர் பரீட்சையில் ஒரே அமர்வில் 4 பாடங்களில் சித்தி, அல்லது

(2) ஒரே அமர்வில் 3 பாடங்களிலும் இன்னெரு அமர்வில் ஒரு பாடமுமாக (இரு அமர்வுகளில்) 4 பாடங்களில் சித்தி, அல்லது

(3) தூய கணிதம், பிரயோக கணிதம் உட்பட ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி, அல்லது.

(4) 21 வயதிற்கு மேற்பட்டவர்களாயின் 3 பாடங்களில் சித்தி, அல்லது

(5) ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் அல்லது கணித சிறப்பு பயிற்சி ஆசிரியர் சான்றிதழ் அல்லது வர்த்தக சிறப்பு பயிற்சி ஆசிரியர் சான்றிதழ் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விரிவுரைகள் யாவும் தமிழ் மொழிமூலம் சனி, ஞாயிறு நாட்களில் மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் நடைபெறும். யாழ்ப்பாணத்தில் பயில விரும்பும் மாணவர்கள், ''அதிபர், பட்டப்படிப்புகள் கல்லூரி, 173/9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கும், மட்டக்களப்பில் பயில விரும்பும் மாணவர்கள், ''அதிபர், பட்டப்படிப்புகள் கல்லூரி, 37 பிரதான வீதி, மட்டக்களப்பு'' என்ற முகவரிக்கும் 9'' X 4'' அளவுடைய சுய முகவரியிடப்பட்ட 35 சத முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை அனுப்பி, இலவச விபரங்களையும், விண்ணப்பப்படிவங்களையும் பெறலாம். இக்கல்லூரியிலிருந்து பெறப்படும் விண்ணப்பப்படிவங்களிலேயே மாணவர்கள் விண்ணப்பிக்கவேண்டும். விண்ணப்ப முடிவு திகதி 1981-ம் ஆண்டு தை மாதம் 10-ம் திகதியாகும்.

THE COLLEGE OF DEGREE STUDIES

**அதிபர்,**
**பட்டப்படிப்புகள் கல்லூரி,**
15, சென் லோறன்ஸ் வீதி,
கொழும்பு-6

## வடபிராந்திய போக்குவரத்துச்சபை:

# சீர்கேடுகள், ஊழல்கள்பற்றி பாராளுமன்றத்தில் புகார்

(கொழும்பு)

''யாழ்ப்பாணத்திலிருந்து 42 மைல் தூரத்திலுள்ள கிளிநொச்சிக்கும், 22 மைல் தூரத்திலுள்ள குறிகாட்டுவானுக்கும சமமான பஸ் கட்டணம் ரூபா 5 போக்குவரத்துச்சபையால் அறவிடப்படுகிறது. தார்மீகம் பேசும் அரசு இப்படிச் செயல்படலாமா? இது தார்மீகமாகுமா?'' என்று போக்குவரத்து அமைச்சின் மான்யம் மீதான குழுநிலை விவாதத்தை ஆரம்பித்துப் பேசிய ஊர்காவற்றுறை உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் சபையில் கேள்வி எழுப்பினுர்.

நெடுந்தீவு கிராமசபை விசேட ஆணையாளர் இதுபற்றி போக்குவரத்துச்சபைத் தலைவருக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளதாகக் குறிப்பிட்ட பண்டிதர் தூரத்துக்கு ஏற்ப சீரான பஸ் கட்டணத்தை நாடுமுழுவதும் அறவிட தனி நபர் பிரேரணை ஒன்று இச்சபையில் நிறைவேற்றப்பட்டபோதும் கூட அது இதுவரை அமுல் நடத்தப்படவில்லை என்றும், பின்தங்கியபகுதி மக்களே இவ்வாறு அதிக பணத்தைச் செலுத்துகிருர்கள் என்றும் கூறினுர். அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

''போக்குவரத்துச் சேவை பொது மக்களுடன் தொடர்புடையது. ஆனுல் நிர்வாகத் திறமையின்மை, ஊழல், அரசியல் தலையீடு, அரசியல் காழ்ப்பு, தொழிற் சங்கங்கள் சிலவற்றின் செல்வாக்கு என்பவற்ருல் சீர்குலைந்துள்ளது. மக்கள் தாங்கமுடியாத அளவுக்கு பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

''போக்குவரத்துச்சபை பன்முகப்படுத்தப்பட்டது நல்ல விடயம். ஆனுல் வடபிராந்தியசபை திறமையாக இயங்காமையால் பன்முகப்படுத்தலின் பயனை அச்சபை பெறவில்லை. அமைச்சரை வரவேற்ருலும், பழைய பஸ்களுக்கு மையைப்பூசினுலும்தொழிலாளர் மத்தியில் அங்கு அதிருப்தி நிலவுகிறது. ஐ. தே. க. தொழிற்சங்கத்தின் தொல்லை நிலவுகிறது. இப்போது அச்சபைக்கு மூன்ருவது தலைவராக திரு. எஸ். சண்முகரத்தினம் நியமிக்கப்படவிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன, அது உண்மையா?

அமைச்சர் முகம்மது: ஆம்.

பண்டிதர் இரத்தினம்: ''புதிய தலைவரின் கீழே அங்கு நிலவும் குறைபாடுகள் நீக்கப்படவேண்டும். அங்கு சாரதிப் பயிற்சிக்கு வேறு எச்சபையிலும் இல்லாதவிதத்தில் ரூபா 3000 பெறுகிருர்கள். அப்படிப் பயிற்சி பெறுபவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதமும் அளிக்கப்படுவதில்லை. தகுதி அடிப்படையில் சாரதிகளைத் தேர்ந்து அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும்படி கேட்கிறேன்.

''தமிழ்ப்பகுதிகளில் சிற்றூழியர்கள்கூட தமிழ் தெரியாதவர்கள்தான். வடபிராந்திய சபையின் தலைவர் மாத்திரமன்றி பொது முகாமையாளரும்கூட தமிழ் தெரியாதவரே என்ருல்: தமிழ் மொழி உரிமை: தமிழரின் உரிமை என்ன ஆகிறது? தமிழ்ப் பகுதிகளிலேயே ஊழியர்கள். மொழிபெயர்ப்பாளர் ஒருவரையும் அழைத்துச்செல்லநேர்கிறது.

''ஊழியர் ஒருவரும் பிரதேச சபையில் இடம்பெறுவர் எனக் கூறப்பட்டது. ஆனுல் வடபகுதி சபையில் எவரும் இதுவரை அப்படி நியமிக்கப்படவில்லை.

''வடபகுதி சபை புனரமைக்கப்பட்ட உதிரிப் பாகங்களை வாங்குவதாகவும், சபைச்குச் சொந்தமான 'கராஜ்' இருக்க வெளியார் 'கராஜ்'க்கு' 3 லட்சம் ரூபா செலுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இப்போது 3 லட்சம் ரூபாவுக்கு வீடொன்றை வாங்கி வாடி வீடாக்சவிருப்பதாகவும் கூறப்படுகிறது. இவை உண்மையானவையா?

''தீவுப்பகுதியில் படகுச் சேவையையும் போக்குவரத்துச்சபை நடத்தவேண்டும். யாழ்ப்பாணத்துக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள புகையிரத பெட்டிகள் பழை

(8-ம் பக்கம் பார்க்க)

## உதைபந்தாட்டப்போட்டி

(அரியாலை)

தேசிய இளைஞர் சேவை மன்ற உத்தியோகத்தர்களுச்கும், இலவாணகுளம் புனரமைப்பைச்சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும், இலவாணகுளம் புனரமைப்பைச் சேர்ந்த தேசியஇளைஞர்சேவை மன்ற ஊழியர்களுக்குமிடையே மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் தேசிய இளைஞர் சேவைமன்ற உத்தியோகத்தர்கள் கோஷ்டி 3:1 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. க. சிவானந்தம் மத்தியஸ்தராகக் கடமையாற்றனுர்.

ஸ்ரீராம ஜெயம்

# வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான


# இலட்சார்ச்சனை வழிபாடு

எதிர்வரும் 1-1-1981 (மார்கழி 19-ஆம் திகதி) வியாழக்கிழமை ஏகாதசி கூடிய தினத்தன்று காலை 7-00 மணிமுதல் தொடர்ந்து இரவு வரை ஏகதின இலட்சார்ச்சனைஹோமம் நடைபெற திருவருள் கொண்டு உத்தேசித்திருப்பதால் மேற்படி அர்ச்சனையில் 100 பேர் உபயமாக பங்குகொள்ளலாம். பங்குபற்ற விரும்புவோர் மேற்படி தேவஸ்தான அலுவலகத்தில் தமது பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளவும். ஒரு உபயத்திற்குக் கட்டணம் ரூபா 100/-

மேற்படி தேவஸ்தான
ஆதினகர்த்தர்கள்.

7671


# நமபகமானவை ரவி
## பெயின்ட்/வானிஸ் பிறஷ்கள்



- நீடித்த பாவனையுடையவை
- நீண்ட தூரிகை மயிர்
- கையாள்வது சுலபம்
- குறைந்த நேரத்தில் கூடுதலான இடப்பரப்புக்கு வர்ணம் பூசுகின்றன

உற்பத்தியாளர்கள்.
ரவி இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட்.
ஹேலீஸ் லிமிட்டெட்.
தாபனத்தின் துணை நிறுவனம்

கிடைக்குமிடங்கள்: க. பொ. கூ. விற்பனை நிலையங்கள், இரும்பு வியாபாரிகள், முன்னணி சில்லறை வியாபாரிகள் மற்றும் ஹேலீஸ் சில்லறை விற்பனை நிலையம், 40, கெய்சர் வீதி, புறக்கோட்டை. தொலைபேசி: 20052.

**ரவி பெயின்ட்/வானிஸ் பிறஷ்கள்**

| வடிவமைப்பு இல. | அளவு மி. மீ. | பிறஷ் ஒன்றுக்கு சிபாரிசு செய்த விலை: |
|---|---|---|
| 001-1 | 12 | 6/20 |
| 001-2 | 18 | 7/00 |
| 001-3 | 25 | 9/25 |
| 001-4 | 37 | 13/30 |
| 001-5 | 50 | 20/25 |
| 001-6 | 62 | 25/75 |
| 001-7 | 75 | 31/60 |
| 001-8 | 100 | 42/90 |
| 001-9 | 125 | 51/40 |
| 001-10 | 150 | 63/00 |

Mel Ads


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரட்டைக் கொலை வழக்கு: சிங்கள ஜூரர் முன்னிலையில் விசாரணை; நதிபதி அனுமதி

(பண்டத்தரிப்பு)

இளவாலை மாரீசன்கூடலில் கடந்த 1978ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற சாதிக் கலவரத்தில் இருவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த 10பேர் மீது குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் ஜமீல் முன்னிலையில் ஆரம்பமானபோது சந்தேகநபர்கள் 10 பேரும் இவ்வழக்கை சிங்களம் பேசும் ஜூரர்கள் மூலம் விசாரணை செய்யப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி வழக்கை மார்ச் மாதம் 30ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் கடந்த 1978ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இளவாலை மாரீசன்கூடல் என்ற இடத்தைச் சேர்ந்த முத்துத்தம்பி சுவாமிநாதன், சுவாமிநாதன் மன்மதராசா ஆகிய தந்தை, மகன் இருவரையும் சாதிக்கலவரம் காரணமாக துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ததாக 10 சந்தேகநபர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது. நீதிபதி ஜனாப் ஜமீல் இவர்களை 1000 ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதித்து அடுத்த தவணையை எதிர்வரும் மார்ச் மாதம் 30ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. தம்பிரத்தினம், சட்டத்தரணி எஸ். தேவராசா ஆகியோர் ஆஜரானார்கள். சந்தேகநபர்களுக்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி செல்வி எஸ். பொன்னையாவும் ஆஜரானார்.

## முதலாவது மதகுக்குழாய்த் தொழிற்சாலை

(யாழ்ப்பாணம்)

இலங்கை முதலீட்டாளரின் முயற்சியினால் பெருந் தெருக்கள் திணைக்களம் பயன்படுத்தும் கொங்கிறீட் மதகுக் குழாய் உற்பத்தித் தொழிற்சாலையொன்று கிளிநொச்சித் தொகுதியிலுள்ள கனகாம்பிகைக் குளத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத் தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 50 கொங்கிறீட் மதகுக்குழாய்களை உற்பத்திசெய்வதுடன் பலபடித்த வாலிபர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்கியுள்ளது.

இத்தொழிற்சாலையில் உற்பத்திசெய்யப்படும் சகல உற்பத்திக்குழாய்களையும் பெருந்தெருக்கள் திணைக்களம் கொள்முதல் செய்யும்.

முன்னர் இத் தொழிற்சாலைகளை வெளிநாட்டவர் மட்டும் இலங்கையில் மேற்கொண்டனர். (க)

## கைதான இந்திய மீனவர் கொழும்புக்கு அனுப்பப்பட்டனர்

(மாவிட்டபுரம்)

வேலை பெற்றுத்தருவதாகக் கூறி இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட 12 இந்தியர்களையும் அங்கு திருப்பி அனுப்பும் பொருட்டு பொலிசார் கொழும்புக்குக்கொண்டு சென்றுள்ளனர்.

இந்தியாவிலிருந்து மூன்று இனந்தெரியாத நபர்களால் வேலைபெற்றுத்தருவதாகக்கூறி இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட 12 இந்திய மீனவர்களும் காங்கேசன்துறை சட்டவிரோதத் தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் திரு. நல்லையாவினால் விசாரணை செய்யப்பட்டு பின்னர் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பும்முகமாக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்களை இங்கு அழைத்து வந்ததாகக் கூறப்படும் மூன்று நபர்களையும் தேடி பொலிசார் வலைவிரித்துள்ளனர்.

## தெங்கு ப. கூ. சங்கப் பிரச்னைகள்: யாழ். செயலகத்தில் 27-ல் மாநாடு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகள் பற்றியும் ஆராய்வதற்கான உயர் அதிகாரிகளைக் கொண்ட மகாநாடு இம்மாதம் 27-ம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இம்மகாநாட்டில் நிதி அமைச்சு, கலால் பகுதி ஆகியவற்றைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுடன் மேற்படி கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள். யாழ். திட்டமிடல் அதிகாரி திரு எஸ். சிவதாசனினால் இம்மகாநாடு கூட்டப்படுகிறது.

தற்போது அமுலிலிருக்கும் கலால் சட்டம் மாற்றியமைக்கப்படுதல், மதுபானம் சட்டவிரோதமாக விற்பனவு செய்வதைத் தடை செய்தல், சட்டவிரோதமான மதுசாலைகளை ஒழித்தல், மேலதிகமாக இறக்கப்படும் கள்ளை சாராயத்திற்காகப் பயன்படுத்தல் போன்ற பிரச்னைகள் இம்மகாநாட்டில் ஆராயப்படவுள்ளது.

சகல தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சார்பிலும் அதன் சமாசம் சங்கங்களின் குறைபாடுகளை எடுத்துக் கூறி நிவாரணம் தேடுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. (கொ)

## மணிவாசகர் விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையின் 26வது மணிவாசகர் விழா ஈழத்துச்சிதம்பர தேவஸ்தான மண்டபத்தில் நாளை ஆரம்பமாகி தொடர்ந்து நான்கு தினங்கள் நடைபெறும்.

இவ்விழாவை நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகள் ஆரம்பித்துவைப்பார்.

முதலாம் நாள் நிகழ்ச்சியில் 'பாவையர்க்கோர் பாவை' என்னும் பொருள்பற்றி திருமதி வசந்தா வைத்தியநாதனும், 'என்கொண்டமுகேன்' என்னும் பொருள் பற்றி யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு ச. விநாயகமூர்த்தியும் சொற்பொழிவாற்றுவர்.

## டிசம்பரில் 31 வர்த்தகர்கள் அகப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் டிசம்பர் மாதத்தில் மட்டும் பொருட்களில் கொள்ளைலாபம் சம்பாதிக்க முயன்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் 31 வர்த்தகர்கள் மீது விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினர் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர்.

இவர்கள் அனைவரும் பண்டிகைக்கால உணவுப் பண்டங்களில் கொள்ளைலாபம் சம்பாதிக்க முயன்ற குற்றச்சாட்டுக்களின் பேரில், திடீர் பரிசோதனைக் குழுவினரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். (இ)

## காணிகள் சுவீகரிப்பு

(திருகோணமலை)

திருகோணமலைத் தொகுதியில் உள்ள நிலாவெளி, குச்சவெளிபோன்ற பகுதிகளில் உல்லாசப் பயணிகள் விடுதி அமைக்க இருப்பதாகக் கூறி தமிழ்மக்களுடைய கடற்கரை ஓரக் காணிகளை அரசாங்கம் சுவீகரித்து வருகின்றது.

இதேபோல திருகோணமலை கண்டி வீதியிலும் தென்னமரவாடி வீதியிலும் தேக்கமரம் நடுவதற்காகவும் மரமுந்திரிகை நடுவதற்காகவும் என சில பகுதிகளில் பொதுமக்களைக் குடியேற வேண்டாம் என அரசு கூறியுள்ளது. (அ)

## தென்துருவம் சென்றுள்ள பிரிட்டிஷ்குழு!

லண்டன், டிச. 16

வட - தென் துருவங்களூடாக முதல்தடவையாக உலகை வலம்வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பிரிட்டிஷ் மலையேறும் குழுஒன்று தென்துருவம் சென்றடைந்துள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

இவ்வாண்டு செப்டம்பரில் லண்டனிலிருந்து புறப்பட்ட இக்குழுவினர் 82-ம் ஆண்டு ஏப்ரலில் 80 ஆயிரம் கிலோமீட்டர் வடதுருவத்தைஅடையத் திட்டமிட்டுள்ளனர். (இ)

## மணிவாசகர் விழா

(மாவிட்டபுரம்)

குப்பிளான் கற்கரைக் கற்பகவிநாயகர் ஆலயத்தில் திருவெம்பாவையையொட்டி மணிவாசகர்விழா இடம்பெற்றுவருகிறது.

தினமும் விநாயகருக்கும், நடேஸ்வரப் பெருமானுக்கும் விசேட அபிடேக ஆராதனைகளுடன் மணிவாசகர் வீதியுலா நடைபெறுகிறது.

திருவெம்பாவை நடைபெறும் பத்துத் தினங்களும் இந்த விழா நடைபெறும். இறுதிநாளன்று நடேசப்பெருமானுக்கு அதிகாலை விசேட அபிடேகம் நடைபெறும்.

## திருமலையில் வரட்சி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் வழமைபோல இவ்வருடம் மாரிமழை போதுமான அளவு இல்லை. இவ்வருடம் பெய்யும் மழை தூறலாகவே பெரும்பாலும் இருக்கிறது.

மழையின்மையால் நாட்டில் பசி, பட்டினி என்பன உருவாகலாம் என மக்கள் அஞ்சுகின்றனர். கிராமப் புறங்களில் வயல்களிலுள்ள பயிர்கள் தண்ணீர்இல்லாமல் வாடுகின்றன. (அ)

## ஹட்டனுக்கு இடமாற்றம்

(மாவிட்டபுரம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பி. சுகுனேந்திரன் ஜனவரி முதல் ஹட்டன் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஏற்கனவே அம்பலாந்தோட்டைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தபோதும் அது ரத்துச்செய்யப்பட்டு தற்போது ஹட்டனுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.


## உருளைக் கிழங்கில் காளான் நோய்களை ஒழிப்பது அன்றக்கோல் 70%.


பயிரை இளம் பருவத்திலும் முதிர் பருவத்திலும் தாக்கும் முன், பின் கூற்று வெளிறல் நோய் பற்றி உருளைக் கிழங்கு பயிரிடுவோர் இனி அஞ்சத் தேவையில்லை. அதற்கு வன்மை வாய்ந்த மருந்தான அன்றக்கோல் பங்கசுநாசினியை உற்பத்தி செய்து தருகிறது "ப்பாயர்".

காய்கறி, புகையிலை, திராட்சை, தோடை, பழ விருட்சங்கள், வாழை முதலாம் தாவரங்களைப் பாதிக்கும் காளான் நோய்களுக்கும் அன்றக்கோல் சிறந்தது. ஆரோக்கிய வளர்ச்சி, அதிக விளைச்சல், கூடுதல் லாபம் தருவது அன்றக்கோல்.



உருளைக்கிழங்கைத் தாக்கும் பைட்டோப்தரு என்னும் இங்கே காணும் காளான் நோயை அன்றக்கோல் ஒழிக்கும்.

Mel Ads




பயிர்களுக்குச் சிறந்த பாதுகாப்பு "ப்பாயர்" ஒரு "ப்பாயர்" உற்பத்தி.

இலங்கையில் தயாரிப்போர்
ஹேகெம லிமிட்டெட்
50, பொஸ்டர் ஒழுங்கை,
கொழும்பு - 10.

500 கிராம்ஸ் – ரூபா 47–50 25 கில்லோ கிராம்ஸ் – ரூபா 1,950–00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவு கொலை—கொள்ளை வழக்கு

# "எதிரிகள் நால்வரையும் பொலிஸ் நிலையத்தில் கண்டேன்"

(ஊர்காவற்றுறை)

"கடந்த ஆகஸ்ட் மாதம் 19-ம் திகதி காலை 10-45 மணியளவில் நானும் கொழும்பு கைவிரலடையாளக் கந்தோரில் கடமையாற்றும் திரு. விவேகானந்தனும் ஊர்காவற்றுறைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றோம்."

இவ்வாறு புங்குடுதீவு அன்னம்மா கொலை, கொள்ளை வழக்கில் சாட்சியமளித்த கொழும்பு கைவிரலடையாளக் கந்தோரில், கைவிரல் அடையாளங்களைப் பதிவுசெய்யும் பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. சில்வா கூறினார்.

இவ்வழக்கில் கடந்த ஆகஸ்ட் மாதம் 17-ந் திகதி இரவு புங்குடுதீவு இறுபிட்டியைச் சேர்ந்த சின்னத்துரை அன்னம்மா என்னும் மூதாட்டியைக் கொலை செய்ததாகவும் அவருடைய குடும்பத்தினருக்குச் சொந்தமான பொருட்களைக் கொள்ளையடித்ததாகவும் கொள்ளைபடிக்கப்பட்ட பொருட்களை வைத்திருந்ததாகவும் புங்குடுதீவைச் சேர்ந்த சோமசுந்தரம் சுப்பிரமணியம், கிருஷ்ணபிள்ளை பரமலிங்கம், தம்பாபிள்ளை குணசிங்கம், நல்லையா ஆனந்தன் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ரி. கே. என். திலகன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

விசாரணையில் சாட்சியமளித்த திரு. சில்வா கூறியதாவது:

"நான் கொழும்பு கைவிரலடையாளக் கந்தோரில் கைவிரலடையாளங்களைப் பதிவு செய்பவராகவும் திரு விவேகானந்தன் அவற்றை புகைப்படம் பிடிப்பவராகவும் கடமையாற்றுகின்றோம். கடந்த ஆகஸ்ட் மாதம் 19 ம் திகதி காலையில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க நானும் திரு. விவேகானந்தனும் சம்பவம் நடந்த வீட்டிற்கு சென்றோம். அப்போது அங்கே இரண்டு பொலிசார் காவல்புரிந்து கொண்டிருந்தனர். நாங்கள் அங்கு சென்று வீட்டிற்குள் இருந்த பொருட்களைப் பரிசோதித்தோம். பின்னர் கத்தி, பொலித்தீன் பை ஆகியவற்றிலிருந்த கைவிரலடையாளங்களைப் பதிவுசெய்து புகைப்படம் எடுத்தோம். நாங்கள் எடுத்த படங்களைக் கைவிரலடையாளக் கந்தோருக்கு கந்தோர் பதிவாளர் திரு. ரத்னயக்காவிடம் ஒப்படைத்தோம்."

சிங்களமொழியில் அளிக்கப்பட்ட இவரது சாட்சியம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு பதியப்பட்டது.

கொழும்பு கைவிரலடையாளக் கந்தோர் புகைப்படப் பிடிப்பாளரான திரு பொன்னுத்துரை விவேகானந்தன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

நான் கடந்த ஆகஸ்ட் மாதம் 19-ம் திகதி திரு. சில்வாவுடன் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்று புகைப்படம் எடுத்து கைவிரலடையாளக் கந்தோர் பதிவாளரிடம் கொடுப்பதற்காக திரு. சில்வாவிடம் ஒப்படைத்தேன்" என்று கூறினார்.

காலஞ்சென்றவரின் கணவரான திரு சின்னத்துரை (வயது 72) 1-ம், 4-ம் எதிரிகளின் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தாவினால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

அப்போது அவர் கூறியதாவது:

"சம்பவம் நடந்ததன் பின்னர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்கு மூன்று தடவைகள் சென்றேன். அதில் இரண்டு தடவைகள் இன்ஸ்பெக்டருடன் சென்றுள்ளேன். கொள்ளையடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டிருந்த பொருட்களை அடையாளம் காட்டுவதற்காக ஒரு முறை சென்றபோதே எதிரிகள் நால்வரும் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்ததைக் கண்ணுற்றேன். அப்போது எனது மகன் வெளியே இன்ஸ்பெக்டருடன் கதைத்துக்கொண்டிருந்தார்" என்றார்.

இவ்வழக்கில் 1-ம், 4-ம் எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா, சட்டத்தரணி எஸ். கனக மனோகரனின் அனுசரணையுடனும் 3-ம், 3-ம் எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி கே. வி. எஸ். சண்முகநாதன், சட்டத்தரணி திருமதி சரோஜினி இளங்கோவனின் அனுசரணையுடனும் ஆஜராகியிருந்தனர். அரச தரப்பில் யாழ் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ஜனாப் எம். எஸ். எம். நிஸாம் ஆஜராகி சாட்சியத்தை நெறிப்படுத்தினார். இறந்தவரின் நலன்களைக் கவனிக்குமுகமாக சட்டத்தரணி எஸ். யோகேஸ்வரன் ஆஜராகியிருந்தார்.

மேல்விசாரணை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 6 ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## இன்றைய பலன்

கார்த்திகை மாதம்
3-ந் திகதி வியாழக்கிழமை
18-12 80

மேடம்: கடனமயில் புதிய ஆர்வம் பிறக்கும். சிலருக்கு பதவி உயர்வு ஏற்படலாம் வெளியிடத் தொடர்புகள் மூலம் செல்வாக்குப் பெருகும். நீண்ட நாள் பிணக்குகள் இன்று நிவர்த்தியாகும்.

இடபம்: குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகள் இடம் பெறும் வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சிகரமான செய்தி ஒன்று கிடைக்கலாம். பணவுரவுக்கும் இடமுண்டு. உடல் நலத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமுண்டு.

மிதுனம்: வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம். வேண்டாத உறவுகளைத் தூண்டித்தல் நன்று.

கடகம்: மாது வழிப் பெருமைக்கும் இடமுண்டு. மனம் போல் யாவும் கிடைக்கும். இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் கிடைக்கும்.

சிங்கம்: வேண்டியவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நீண்டநாள் பிணி இன்று விடைபெறும். குடும்பத்திலும் மகிழ்ச்சியுண்டு.

கன்னி: முக்கியமான விடயங்களை இன்று பின்போடுவது விரும்பத்தக்கது. உள்வீட்டிலேயே உளவு வேலை நடைபெறலாம். பகைவர்களின் நடவடிக்கை இறுதிவரை பரமரகசியமாகவே இருக்கும் உஷார் நிலை விரும்பத்தக்கது.

துலாம்: வாழ்வுப் பயணத்தில் இன்று வளமான திருப்பம் ஏற்படும். இலட்சியவாதிகள் பூரிப்படைவார்கள். குடும்பத்தில் குதூகலமான சம்பவம் இடம் பெறும். பொதுவாக மனநிறைவுக்கு இடமுண்டு.

விருட்சிகம்: நம்பிக்கை மோசடி மூலம் நலிவுகள் தென்படும். நண்பர்களின் தொல்லைகள் அதிகரிக்கும் தொழில் புரியுமிடத்தில் மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு இலக்காகலாம். நிதானம் நன்று.

தனு: வாகனச் சொந்தக்காரர்களுக்கு வருமானம் பெருகும். ஆசிரியர்களாயின் அவர்கள் பணி சிறப்பாக இருக்கும். சிலருக்கு ஆராய்ச்சிகளில் ஆர்வம் பிறக்கும். பொன்னான தினம்.

மகரம்: கடமையாற்றும் இடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும். புதிய கண்டு பிடிப்புக்களில் ஊக்கம் ஏற்படும். டாக்டர்கள் போற்றப்படுவார்கள். தூரத்துச் செய்தியொன்று உற்சாகத்தை ஏற்படுத்தும் நல்லநாள்.

கும்பம், புதிய வழிகள் மூலம் பொருள் வரவுக்கு இடமுண்டு. சிலருக்குப் பதவி உயர்வும் கிடைக்கலாம் குடும்பத்தில் இனிமை தவழும். பிள்ளையொன்றின் கல்வயில் அதிக கவனம் செலுத்த நேரிடலாம்.

மீனம்: எதிர்பாராத செலவினங்களினால் பாதிக்கப்படுவீர்கள். கடன் வாங்கவும் நேரிடலாம். சமீபத்தில் நடந்து முடிந்தசம்பவம் ஒன்று மனதிற்கு வேதனையைத் தரலாம். தொழிலிலும் தொல்லை உண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)
அல்வாய் ஆகிய இடங்களிலிருந்து மீட்டுள்ளது.

அத்துடன் இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக வியாபாரிமூலையைச் சேர்ந்த கே. முருகானந்தன் என்ற வாலிபரையும் சந்தேகத்தின்பேரில் கைது செய்துள்ளனர். (க)


ஸ்ரீதர் (யாழ் நகர்) தினசரி10-30, 2-00, 6-00 & 9 30
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
மீனவநண்பன்

ராணி - (யாழ்:நகர்)
தினசரி 10-30, பி. ப. 2-15, 6-00 இரவு 9-30
ஒரு தலை காதல்
(குடும்பப் பெண்ணின் கதை)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
வெற்றிகரமான 2-வது மாதம்
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
ஜெய்சங்கர், சீமா, கே. ஆர். விஜயா
ஒரேவானம் ஒரேபூமி
(வண்ணக்கலர்)

LAST FEW DAYS ONLY
SANTHI (JAFFNA) DAILY 4 SHOWS
10-30, 2-30, 6-30, 9-30
★ LEE MARVIN. ★ CHARLS BROWNSON
★ JIM BROWN
"THE DIRTY DOZEN"

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்
19-ம் திகதி முதல்
நினைத்தாலே இனிக்கும்

லிடோ (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
எம்.ஜி.ஆர்.- சாவித்திரி
வேட்டைக்காரன்

ராஜா (யாழ் நகர்) தினசரி 10-30, 2-15, 6-00 & 9-30
இமயம் முதல் குமரிவரையுள்ள பல நூற்றுக் கணக்கான புனித ஸ்தலங்களை உள்ளடக்கியதும், தனக்கேற்பட்ட துன்பங்களை தூசியென எண்ணி தான்கொண்ட தெய்வபக்தியே மேல் என நினைத்த ஒரு பக்தனின் கதைதான் 'சுப்ரபாதம்.'
என்றுமில்லாதவாறு காட்சிக்கு காட்சி ஜனத்திரள் நிறைந்து காட்சியளிக்கிறது.
ஜெய்கணேஷ், சுந்தரராஜன், நம்பியார், கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்
சுப்ரபாதம்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி தினசரி 10-30, 2-15, 6-00, 9-30 யாழ்ப்பாணம்





செவன் ஆர்ட்ஸ் அளிக்கும்
ஒருதலை காதல்
ஒரு குடும்பப் பெண்ணின் உணர்ச்சிப் போராட்டம்

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர்.-விஜயகுமாரி
சாரதா

வெலிங்டன் (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30,
சனி-ஞாயிறு 2-30
சிவாஜி-சாரதா
ஞானஒளி

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி-ஞாயிறு 2-15
ஞானக்குழந்தை

வின்ஸர் (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, இரவு 9-30
எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா-ஆனந்தன்
தனிப்பிறவி (புதிய பிரதி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும கிடைக்கும்
எண்சோதிட மறுமலர்ச்சி
இலங்கை சோதிட ஆய்வுமன்ற
வெளியீடு - 1
ஆசிரியர்: Dr. பண்டிற்
K N. நவரத்தினம் A. F. A,
விலை ரூபா 3-00
வியாபாரிகளுக்கு ஏற்ற கழிவுண்டு.
(1) K N. நவரத்தினம்
211, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(2) திருக்கணித நிலையம்
சாவகச்சேரி.
(3) பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம். 7645

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

# இலங்கையில் யுரேனியம்?

(கொழும்பு)

இலங்கையில் ஐந்து பிரதேசங்களில், யுரேனியம், தோறியம் ஆகிய கனிப் பொருட்கள் பெருமளவில் இருப்பதாக புவியியல் ஆராய்ச்சித் திணைக்களம் கண்டுபிடித்துள்ளது

புவியியல் ஆராய்ச்சித் திணைக்கள இயக்குநர் திரு. டீ ஏ. ஏ. சி. அப்பு ஆராச்சி இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இக்கனிப்பொருட்கள் காணப்படும் ஐந்து இடங்களும் வெள்ளவாயா, திருகோணமலை, அறுகம்பே, றக்குவான, தப்புவ ஆகும். இப் பிரதேசங்களில் காணப்பட்ட புவியின் சில கூறுகள் க

தொழிற்பாட்டு ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட போது இப பிரதேசங்களில் மேற்கூறப்பட்ட இரு கனிப்பொருட்களும் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டது.

தற்கால உலகில் முதன்மை வகிக்கும் அணு சக்திக்குப் பெரிதும் உபயோகப்படுத்தப்படும் அடிப்படைக் கனிப் பொருட்கள்தான் யுரேனியமும் தோறியமும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# கழிவுப் பொருளிலிருந்து அமிலம் தயாரிப்பு!

(சித்தன்கேணி நிருபர் வே. த. கதிர்காமநாதன்)

காரைநகர் சீநோர் தொழிற்சாலையில், கழிவாக வெளியில் ஊற்றப்பட்ட கழிவுப்பொருளிலிருந்து தூய 'அசெற்றின்' அமிலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது! புதிய கண்டுபிடிப்பிலிருந்து இத் தொழிற்சாலைக்கு மாதாந்தம் 16,000 ரூபா லாபமாக கிடைக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

இத்தொழிற்சாலையில் கடமையாற்றும் களஞ்சியப் பொறுப்பாளர் திருச்செல்வம் சுபபிரமணியம் இக்கழிவுப் பொருட்களைச் சேகரித்துத் தொழிற்சாலையில் ஆய்வுகளை மேற்கொண்டார், மூன்று தினங்கள் மேற்கொண்ட ஆய்வு நேற்றுமுன்தினம் மாலை வெற்றியளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

புதிய ஆய்வுகளின்படி இருபது நிமிடத்தில் மூன்று போத்தல் கழிவுப் பொருளிலிருந்து ஒரு போத்தல் 'அசெற்றின்' திரவம் கிடைக்கும் என்று கூறப்பட்டது. மிகக்குறைந்த வெப்பநிலையாக 70 பாகை சென்றிக்கிரேட் வெப்பத்தில் இக் கழிவுப்பொருள் வெப்பமாக்கப்பட்டு தூய ஆவியை சமநாலு பாகை சென்றிக்கிரேட் குளிர்மையால் இத்திரவம் பெறப்பட்டுள்ளது.

இவ்வாராய்ச்சி, வெற்றியளித்ததை தொடர்ந்து சீநோர் முகாமைத்துவம் விரிவான ஆராய்ச்சியொன்றை மே கொள்ளுமாறு இரசாயன பகுப்பாய்வாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளதாக தெரிகிறது.

புதிய ஆய்வின்படி கல்ப்நார் படகு நிர்மாணத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள்; தமது கைகளில் படியும் கறைகளை அகற்றுவதற்குத் தொடர்ந்தும் ஒரே 'அசெற்றின்' திரவத்தைப் பெறமுடியும், முன்னர் கைகளில் படியும் கறைகளானபொலியெஸடர் பொட்டனக்ஸ், கோமேல், சயலின் போன்ற பொருட்களை அகற்றுவதற்கு 'அசெற்றின்' திரவம் பாவிக்கப்பட்டு கூட்டுப்பொருளாக பயன்படாது கழிவாக வெளியில் ஊற்றப்பட்டது. இக் கழிவுக்கூட்டுப்பொருள் கடந்த 13 வருடங்களாக றப்பட்டது. இவ் ஆய்வினை மேற்கொண்டவர்களான சுப்பிரமணியம், தோப்புக்காட்டைச்சேர்ந்த திரு, திருமதி திருச்செல்வத்தின் புதல்வரும், வட இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத் தலைவருமாவார்.

## பியல் காலமானார்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மத்திய வை எம் சீ.ஏ.யின் முதலாவது பொதுச் செயலாளராகக் கடமையாற்றிய திரு. ஆர். ஓ. பியல் காலமானார். இறக்கும்போது இவருக்கு 88 வயதாகும்.

திரு. பியல் 1932 முதல் 1958 வரை வை. எம். சீ. ஏ.யின் முதலாவது தேசிய பொதுக் காரியதரிசியாக கடமையாற்றியதுடன் மொத்தம் 48 வருடங்கள் இச்சங்கத்தில் சேவையாற்றியுள்ளார்.

இவர் யாழ்ப்பாணத்தின் காலஞ்சென்ற பிரபல கல்விமான் திரு. தம்பு பியலின் மகனுவார். (வெ)

## உபதேர்தலைப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

★ 25ம் திகதி கிறிஸ்மஸ் தினமாகையால் கத்தோலிக்க எம் பி.க்கள் 23ம் திகதி விவாதத்திற்கு வருவதில் பெரும் இடைஞ்சல் ஏற்படும்.

இவ்விவகாரம் குறித்து இன்று நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது

திரு. பிலப்பிட்டியாவே தொடர்ந்தும் கலவான எம். பி.யாக இருப்பார் என சபாநாயகர் தீர்ப்பு வழங்கியதை அடுத்து கடந்த 11ம் திகதி சபாநாயகருக்கு எதிராகஎதிர்க் கட்சிகள் சமர்ப்பித்திருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் இம்மாதம் 23ம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே

## சீர்கேடுகள்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

யவை. அவற்றில் நீர், வெளிச்ச வசதிகள் இல்லை.'5

அமைச்சர்: "மிக விரைவில் யாழ். புகையிரம் அனைத்துக்கும் முற்றிலும் புதிய பெட்டிகள் இணைக்கப்படும்." (ம)

## "இளங்கதிர் சஞ்சிகை"

(பேராதனை)

பேராதனைப் பல்கலைக் கழக தமிழ்ச் சங்கத்தின் வருடாந்த சஞ்சிகையான 'இளங்கதிரை' விரைவில் வெளியிடும் முயற்சியில் தமிழ்ச்சங்கத்தின் புதிய நிர்வாகக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர். பல்கலைக்கழகப் பழைய மாணவர்கள், ஏனைய எழுத்தாளர்கள், கவிஞர்கள். மாணவர்களிடமிருந்து இச்சஞ்சிகைக்கு ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

## சூறாவளி அபாயம்: ஆபத்து இல்லை

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் உருவாகிவந்த பவன அமுக்கம், வேகம் குறைந்து அற்றுப் போகும் நிலையிலிருந்து வருவதாக இலங்கை வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால் இப்பவன அமுக்கத்தின் மூலம் இலங்கைக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படமாட்டாதென்று அது மேலும் தெரிவித்துள்ளது.

## கலவானை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வது ஜனநாயக சோஷலிஸத்துக்கு முரணானது.

அமைச்சரவையின் மேற்கண்ட முடிவு தொடர்பாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பிரேரணை சட்டமா அதிபரின் ஆலோசனையுடனேயே சமர்ப்பிக்கப்படும். (ம-இ)

## பாராளுமன்ற...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்ட முடிவு குறித்த பிரேரணையை ஜனவரி மாதம் 6-ம் திகதி பிரதமர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார் என நேற்று அறிவிக்கப்பட்டதை அடுத்தே மேற்கண்ட கேள்வி எழுந்துள்ளது.

இவ்விவகாரம் குறித்து இன்று நடைபெறும் கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. (ம-இ)

## சாவகச்சேரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி தொகுதிக்கு நானே எம் பி வேறு யாரையும் எனது தொகுதிக்கு எம். பி. யாக நியமனம் செய்து வைத்திருக்கிறீர்களா? அப்படி நியமித்தால் சொல்லுங்கள். அவனோ- அவளோ? சேர்ந்து பணிபுரிகிறேன். இதற்கு அரசியல் அமைப்பில் திருத்தம் செய்யவேண்டாமா?

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி.என் நவரத்தினம் நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினர்.

விசேட அதிகாரிகள் சிபார்சு குறித்து தமக்கு எழுதப்பட்ட கடிதம் குறித்து தாம் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று எழுதியிருப்பதாகவும் திரு. நவரத்தினம் தெரிவித்தார். (ம-இ)

விற்பனைக்கு

(FORD TRANSIST) போட் ரூன்சிஸ்ற் பிரயாணிகள் வானுக்குரிய போர், கிறுங், கியர்பொக்ஸ் பம் முதலியன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: 24, 2ம்குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8031.

(7668)

விரையுங்கள்!
சொற்பமே கையிருப்பில் உண்டு.
ஹோம் பிரூன்ஸ் லிமிட்.
✯ (F)பிளையிங் (B)பொம்
(HONG KONG) பற்றறிகள் மீடியம் அளவு
மொத்த விலை டசின் ரூபா 21-00
ஓடர்களுக்கு முந்துங்கள்.
✶ வாடகைக் கொள்வனவில்
'ஹின்ட் அம்பாஸடர்' சைக்கிள்கள்
முழு செயின் கவர், பூட்டு, பெல்,
சைற் ஸ்ராண்ட், பம்ப், சாவி,
சாவி Bag உடன்
பெற்றுக்கொள்ளலாம்.
முதற் கட்டுப்பணம் ரூபா 170/-
மாதாந்தக் கட்டுப்பணம் ரூபா 90/- வீதம்
12 மாதங்கள்
✶ மேசை மின் விசிறிகளும்,
PEDESTAL மின் விசிறிகளும்
வாடகைக் கொள்வனவில்
பெற்றுக்கொள்ளலாம்.
ஹோம்பிரூன்ஸ்
லிமிட்டெட்
82, கன்னதிட்டி - யாழ்ப்பாணம்

பண்டிகை காலத்திற்கு
கவர்ச்சியான துணிவகைகள்
லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ் வழங்கும்
நியாய விலையில் - - முழுக் குடும்பத்திற்கும் ஏற்ப
✯ புதிய மோஸ்தர் ✯ கண்கவர் வர்ணங்கள்
✯ தரமான துணிவகைகள்
மலிவுவிலையில் ✯ பான்சிவெயர் (Pancy Wear)
✯ ஸ்கேட் (Printed Skirt)
✯ லேடீஸ் பெல்ஸ் (Ladies Bells)
லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்
18, மின்சாரநிலைய வீதி,
நவீனசந்தை, யாழ்ப்பாணம். (தொலைபேசி: 7684)
(உங்கள் வசதி கருதி இரவு 8-00 மணிவரை திறந்திருக்கும்)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாண ... மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் டிசம்பர் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at General Post Office Sri Lanka. under No: GB 8948/78. The Eelanaadu
P. B. No: 49, TeleGrams: Eelanaadu, Phone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org